வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  01.03.2025 சனிக்கிழமை  இதழ் : 60  பக்கங்கள் : 12




# அரியாலையில் மீட்கப்பட்டவை மனித எலும்புகளின் எச்சங்களே!

## நீதிமன்றுக்கு அறிவித்தார் சட்ட மருத்துவ அதிகாரி!

- புதைகுழியா அல்லது தொடர் பகுதியா என ஆராய வேண்டும்!
- ராஜ் சோமதேவா ஆய்வு செய்வதற்கு விருப்பமாம்!

- பு. கஜிந்தன் -



கோப்பு படம்

யாழ்ப்பாணம், மார்ச் 01

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் பெறப்பட்ட 40இற்கும் மேற்பட்ட எலும்பு மாதிரிகளில் இரண்டு தவிர, ஏனைய அனைத்தும் மனித எலும்பு எச்ச மாதிரிகளாகவே உள்ளன என்று விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்திய அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளார் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன். 11

## படையினரின் முகாம்கள் வட, கிழக்கில் மூடப்படும்

பாதுகாப்பு பிரதி அமைச்சர்



கொழும்பு, மார்ச் 01

வடக்கு , கிழக்கு மாகாணங்களில் அத்தியாவசியமான இராணுவ முகாம்களை தவிர்த்து ஏனையவை மூடப்படும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். 11

## காணாமலாக்கப்பட்டோர் குறித்த அறிக்கையைக்கூட காணவில்லை!

கொழும்பு, மார்ச் 30

காணமலாக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக் குழுவின் அறிக்கையும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடா நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு 11



## ரமழான் நோன்பு நாளை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 01

புனித ரமழான் நோன்பு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது என்று கொழும்பு பெரிய பள்ளி வாசல் அறிவித்துள்ளது. 11

## பாதுகாப்பு வைப்புக்கான வட்டியை நுகர்வோருக்கு வழங்கவேண்டும்!

மின்சார சபைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 01

மின்சார இணைப்பு வழங்கும்போது சகல பாவனையாளர்களிடமும் பெறப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கான வருடாந்த வட்டியை மின்சார சபை செலுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மின்சார பாவனையாளர் சங்கம் இலங்கை மின்சார சட்டத்தின் 28/III பிரிவின் படி பெறப்பட்ட வருடாந்திர வட்டித் தொகையை நுகர்வோருக்கு செலுத்துமாறு கோரி இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்தது. இந்த மனு நேற்று வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, "இலங்கை மின்சார 11

## தென்னக்கோனை கைதுசெய்ய உத்தரவு!

கொழும்பு, மார்ச் 01

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாத்தறை - பலன பகுதியில் ஹோட்டல் என்றின் முன்பாக கடந்த 2023 டிசெம்பர் 31 அன்று நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கில் கொழும்பு குற்ற தடுப்பு பிரிவின் 11

78 மேலதிக வாக்குகளால்

## பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றம்!

கொழும்பு, மார்ச் 01

பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் 78 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டன.

பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் குறித்த அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு ஆதரவாக 88 வாகுகளும் எதிராக 10 11



## ஆட்சியை வீழ்த்துவோம் என்பது கனவு மட்டுமே!

ஜனாதிபதி அநுர குமார

கொழும்பு, மார்ச் 30

பொருளாதாரம், உட்கட்சி நெருக்கடிகள் மூலம் மக்கள் போராட்டத்தின் மூலம் எமது ஆட்சியை வீழ்த்துவோம் என்று நினைத்தால் அது ஒரு கனவு மட்டுமே இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி மூலம் ஆதரவளிக்கப்படும் இலங்கை யின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் மூன்றாவது மீளாய்வு அறிக்கை அந்த 11

## குழுவாக செயல்படுவதற்கு தமிழ் எம். பிகளுக்கு அழைப்பு

செல்வம் அடைக்கலநாதன் விடுத்தார்

மன்னார், மார்ச் 01

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட இணைய வேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுத்துமூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 11

## எரிபொருள் விநியோகம் நள்ளிரவு முதல் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியுள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தற்போதுள்ள இருப்பு விநியோகிக்கப்படும் என்ற போதிலும் புதிதாக வழங்கப்படும் கட்டளைகள் (ஓர்டர்) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று அந்த சங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு 11

## நாட்டில் வறுமை நிலை 52 சதவீதத்தால் உயர்வு

கொழும்பு, மார்ச் 01

கடந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் வறுமை நிலை 45 - 52 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று வறுமை பகுப்பாய்வு மையத்தின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், சமூக பாதுகாப்பு வலையமைப்பு மேலும் விரிவாக்கப்படுவது அவசியம் என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நாட்டின் அரைவாசி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்!

## சிறீதரன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 01

நீண்டகாலம் சிறையிலுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளை யும் மனிதாபிமான அடிப்படை யில் விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் சி. சிறீதரன் வலியுறுத் தியுள்ளார்.

நீண்ட காலம் சிறையிலி லுள்ள தமிழ் அரசியல் கைதி களின் பெயர்ப் பட்டியலை நேற்றைய தினம் பாராளுமன் றில் சமர்ப்பித்த பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கதிர்காமத்தம்பி சிவகுமார், விக்னேஸ்வரநாதன் பார்த் தீபன், கிருஷ்ணசாமி ராமசந்தி ரன், சண்முகலிங்கம் சூரிய குமார், ஜோன்சன் கொலின் வெலன்டினோ, சச்சிதானந்தம் ஆனந்த சுதாகர், ஏ. எச். உமர் ஹதாப், தங்கவேலு நிமலன், செல்வராஜா கிருபாகரன், தம்பி ஐயா பிரகாஸ் ஆகியோரில் இரண்டு பேர் 30 வருடங்களாக வும், மூவர் 17 வருடங்களும், ஒருவர் 22 வருடங்களாகவும் மற்றும் நான்கு பேர் 16 வருடங் களாகவும் சிறையில் வாடுகின்ற னர் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

# 'வடிவேலுவின் கிணறு' கதை மன்னாரிலும் நடக்கின்றது!

கொழும்பு, மார்ச் 01

"வடிவேலுவின் கிணறு காணாமல் போன கதை போன்ற நிலைமை, மன்னாரில் மூன்று கிராமங்களின் விளை யாட்டு மைதானங்களுக்கு ஏற் பட்டுள்ளது", என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் கூறுகையில், "மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனை, எமில்நகர் மற்றும் நறுவிலிக்குளம் ஆகிய மூன்று கிராமங்களில் மைதானங்களை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும், அங்கு மைதானத்தின் பணிகள் நடைபெறவில்லை. ஊழல் நடை பெற்றதாகவே நாங்கள் சந்தே கிக்கின்றோம்" - என்றார். (ஐ)

# 'வடந்தை' நூலுக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 01

வடக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் அலகு வருடந் தோறும் வெளியிடும் வடந்தை நூலுக்கு ஆக்கங்கள் கோரப்பட் டுள்ளன.

ஆக்கங்களை அனுப்ப விரும்பு வோர் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பு மாறு பண்பாட்டலுவல்கள் பிரதி பணிப்பாளர் லா. நிருப ராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும், அனுப்பப்படும் ஆக்கங்கள் வடக்கு மாகாணம் சார்ந்ததாக இருக்க வேண்டும், அரசியல் கலப்பற்றதாக இருக்க வேண்டும், தனிப்பட்ட நபரை பாதிக்காது கருத்துகள் முன் வைக்கப்படல் வேண்டும், ஒரு வர் ஒரு கட்டுரையை மட்டுமே அனுப்ப முடியும், ஆக்கம் அவ ரின் சொந்த ஆக்கமாக இருப் பதை உறுதிப்படுத்த வேண் டும், பத்திரிகைகளிலே, சஞ்சி கைகளிலோ, வேறு மலர்க ளிலோ பிரசுரிக்கப்படாதவை யாக இருக்க வேண்டும், கணினி யில் தட்டச்சு செய்யப்பட்ட (எழுத்துரு அளவு -12) மென் பிரதிகளை npc.culture@yahoo.com என்ற முகவரிக்கு அனுப்பு வதுடன் வன் பிரதியை "பிரதி பணிப்பாளர், பண்பாட்டலு வல்கள் அலகு, கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு தபால் மூலமா கவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

ஆக்கங்கள் 4- 6 பக்கங்க ளுக்கு மேற்படாது இருப்பது டன், கையெழுத்து பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படாது என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு வடக்கு ஆளுநர் கண்காணிப்பு பயணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 01

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் நேற்றுமுன் தினம் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டார்.

இதன்போது, அவர் கைத் தொழில் பேட்டையை பார்வை யிட்டதுடன், அங்குள்ள தேவைகள் குறித்தும் கேட்ட றிந்தார்.

நீர் விநியோகம் இன்மை, முன்னறிவித்தல் இல்லாத மின் தடை காரணமாக பாதிப்புகள் ஏற்படுகின்றன என் இதன் போது ஆளுநருக்கு சுட்டிக் காட்டப்பட்டது. இதேநேரம் சில தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இயக்குபவர் களை பழக்குவதற்கு இந்தியா விலிருந்தே ஆட்களை வரவ ழைக்க வேண்டியிருப்பதாகவும் ஆனால், அதற்கான அனும



தியை பெறுவதில் தாமதம் நிலவுவதாகவும் ஆளுநருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், அச்சுவேலி கைத் தொழிற்பேட்டையில் இயங் கும் தொழிற்சாலைகளில் பணி புரிபவர்கள் வருவதற்கு ஏதுவாக பேருந்து சேவையை ஒழுங்குபடுத் தித் தருமாறும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. (ஐ-02-05)

# பதிவு செய்யப்பட்ட வாகன இலக்க தடுகளை பெறலாம்!

யாழ்ப்பாணம், மார்ச் 01

மோட்டார் வாகன போக்கு வரத்து திணைக்களத்தின் தலைமை பணிமனையிலிருந்து யாழ்ப்பாணம் மாவட்ட பணி மனைக்கு கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் கிடைக் கப் பெற்றுள்ளது என்று உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ். மாவட்டத் தின் அனைத்து பிரதேச செயல கங்கள், மாவட்ட செயலகத் திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக் களம் என்பவற்றில் அறியலாம்.

அத்துடன், www.dmtappointments.dmt.gov.lk என்ற இணை யத்தளம் அல்லது 021 211 7116 என்ற தொலைபேசி இலக்கத் துக்கு அழைத்து விதிமுறை களை பின்பற்றி இலக்கத்தகடு களை பெறமுடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ஐ)

# அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறையாக்க ஒத்துழையுங்கள்

## அரச பணியாளர்களிடம் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 01

"அலுவலகங்களுக்காக மக் கள் இல்லை. மக்களுக்காகத் தான் அலுவலகங்கள் இருக்கின் றன என்பதை அரச பணியாளர் கள் நினைவிலிருத்தி அரசாங்கத் தின் கொள்கைகளை நடை முறைப்படுத்த ஒத்துழைக்க வேண்டும்", என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாய கன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத் தும் சமூக பராமரிப்பு நிலை யத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



மேலும், பொது மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடியதாக அரச சேவை அமையவேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அதை அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் இலத்திரனியல் மயப்படுத்தலை தனது கொள் கையில் ஒன்றாக அறி வித்து செயல்படுத்துகின்றது. நவீன மயப்படுத்தினாலும் சேவை களை மக்களுக்கு வழங்கப் போவது இலத்திரனியல் சாத னங்கள் அல்ல. அலுவலர்கள் தான் மக்களுக்கான சேவை களை செய்யப் போகின்றார் கள். எனவே அலுவலர்கள் மக்களுக்கான சேவையை விருப்பத்துடன் செய்ய வேண் டும் - என்றார். (ஐ-02-05)

# நல்லூரில் தமிழியல் ஆய்வரங்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 01

தமிழியல் ஆய்வு நடுவகம், நல்லூர் பிரதேச செயலகம் என்பவை இணைந்து நடத்தும் தமிழ் இலக்கண மரபின் செல் நெறி - ஆய்வரங்கு 01 இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவப்புலவர் கு. ரஜீபன் தலைமையில் நடை பெறும் இந்த ஆய்வரங்கில் தகைசால் தமிழ் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் செ. சிவசுப்பிரமணியம், ஓய்வு நிலை பேராசிரியர் எஸ். சிவ லிங்கராசா கலாநிதி க. மனோன்மணி, முதுநிலை விரி வுரையாளர் க. இரகுபரன் ஆகி யோர் ஆய்வுரைகளை வழங்க வுள்ளனர். (ஐ)

# மெய்வன்மை போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 01

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் இல்ல மெய் வன்மை போட்டி சீரற்ற வானிலை காரணமாக பிற் போடப்பட்டுள்ளது.

மகாஜன கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டி இன்று சனிக்கிழமை சிரேஷ்ட பிரிவின ருக்கும் நாளை ஞாயிற்றுக் கிழமை கனிஷ்ட பிரிவினருக் கும் நடைபெற ஏற்பாடாகியி ருந்தது. எனினும், தொடர் மழை காரணமாக போட்டியை நடத்தக்கூடிய சூழ்நிலை இல் லாமையால் காலவரையறை யின்றி பிற்போடப்பட்டுள்ள தாக பாடசாலை நிர்வாகம் அறி வித்துள்ளது. (ஐ)

# துப்பாக்கி தோட்டாக்கள் மணலாறில் மீட்கப்பட்டன

முல்லைத்தீவு, மார்ச் 01

மணலாறு (வெலிஓயா) பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிப்பன்வெவ பிரதேசத்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது மோட்டார் சைக்கிள் இலக்கத் தடுகள் 2, ரி -56 ரக துப்பாக்கிக்கான தோட்டாக் கள் என்பன கைப்பற்றப்பட் டன என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் படையி னருக்குக் கிடைத்த தகவலின் பேரிலேயே இந்தப் பொருட் கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட் கள் மேலதிக விசாரணைகளுக் காக மணலாறு பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளன. (ஐ)

# காலணிகளுக்கான வவுச்சர்கள் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 01

பாடசாலை காலணிகள் வழங்குவதற்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக் கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம் கல்வி அமைச்சு இதனை தெரி வித்துள்ளது. இதன்படி, 2025 ஆம் ஆண்டுக்கான குறித்த வவுச்சர்களின் செல்லுபடியா கும் காலம் இம்மாதம் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது.

வவுச்சர்களின் செல்லுபடி யாகும் காலம் நேற்று வெள் ளிக்கிழமையுடன் முடிவடைந் தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.03.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது ஓர் அபாய எச்சரிக்கையா...?

ஞானசார தேரர் ஒரு காலத்தில் சர்ச்சைக்குரிய ஒருவர். அவரின் தலைமையில் இயங்கிய பொதுபல சேனா இலங்கைத் தீவின் அரசியலில் திடீர் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய வல்லமையுடன் இருந்தது. 'நல்லாட்சி' காலத்தில் நீதிமன்ற அவதூறு வழக்கு ஒன்றில் கைதான அவர் குற்றம் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறையில டைக்கப்பட்டார். தற்போது, விடுதலையாகியிருக்கும் அவர் உடனடி யாகவே பேச முற்பட்டிருக்கிறார். அதிலும் குறிப்பாக முன்னர் எந்த விடயம் சர்ச்சைக்குரிய இன விவகாரமாக இருந்ததோ - அதனையே கையிலெடுத்திருக்கிறார். அவர் திடீரென்று இவ்வாறு பேசுவதை தற்செயல் நிகழ்வு என்று கூறலாமா?

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் தாம் பல்வேறு தகவல்களை சுயாதீனமாக சேகரித்தார் என்றும் தாக்குதல் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை எச்சரித்தார் எனவும் ஆனால், அவர் அதனை பொருட்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். புதிய அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்தால் அதற்கு உதவத் தயாராக இருக் கிறார் என்றும் தெரிவித்திருக்கின்றார். ஈஸ்டர் தாக்குதல் முஸ்லிம்கள் தொடர்பான இன விரோத அலையை எவ்வேளையிலும் பற்றவைக் கும் ஆற்றலோடுதான் இப்போதும் காணப்படுகிறது. இந்த நிலையில் ஞானசார தேரர் அந்த விவகாரத்தைத் திடீரென்று கையிலெடுத்திருப் பது ஓர் அபாய எச்சரிக்கையை முன்னுணர்த்துகிறதா என்னும் கேள் வியை எளிதில் புறந்தள்ளிவிட முடியாது.

அதேவேளை, தேரர் இப்போது இன்னொரு புதிய விடயத்தையும் கையிலெடுத்திருக்கிறார். அதாவது, அமெரிக்க உதவி நிறுவனம் திட்டமிட்டு பல அரசுசாரா நிறுவனங்களுக்கு நிதி வழங்கியதாகவும் அவ்வாறான திட்டங்கள் பௌத்த மக்களை பலவீனப்படுத்தும் நோக் கம் கொண்டவையாக இருந்தன என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண் டும் எனவும் அவர் குறிப்பிடுகிறார். அண்மையில், அமெரிக்க உதவி நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை அந்த நாட்டின் புதிய ஜனாதி பதி ட்ரம்பின் நிர்வாகம் 90 நாட்களுக்கு இடைநிறுத்தியிருக்கிறது. இதனால், உலகெங்கும் ஆயிரக்கணக்கான அரசுசாரா நிறுவ னங்களும் அராசாங்கத் திட்டங்களும் முடங்கியிருக்கின்றன.

உண்மையில், இது ஓர் உலகளாவிய விவகாரமாகும். அதாவது, அமெரிக்க உதவி நிறுவனத்தின் கீழ் நிதியளிக்கப்பட்ட பல திட்டங் கள் வினைத்திறன் மிக்கவையாக இருக்கவில்லை. எனவே, அமெ ரிக்க மக்களின் பணத்தை இவ்வாறு வீணாக்க முடியாது என்ற குற்றச் சாட்டின் அடிப்படையிலேயே ட்ரம்பின் நிர்வாகம் இந்த விடயத்தைக் கையிலெடுத்திருக்கிறது.

இலங்கையில் பல மில்லியன் டொலர்கள் ஊடக மேம்பாடு என்னும் பெயரில் செலவழிக்கப்பட்டதாக ட்ரம்ப் நிர்வாகத்தால் உருவாக்கப்பட்ட வினைத்திறன் மேம்பாடு தொடர்பான திணைக்களம் கேள்வி எழுப்பி யிருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே, அண்மையில் ராஜ பக்ஷ ஆதரவாளர்கள் சிலர் அமெரிக்க தூதரகத்துக்கு முன்னால் ஒன்றுகூடி, "அமெரிக்க உதவி நிறுவனத்தால் செலவழிக்கப்பட்ட நிதி தொடர்பில் விசாரணைகள் வேண்டும்", என்று கோரிக்கை முன் வைத்திருந்தனர். தற்போது அதே குற்றச்சாட்டையே ஞானசார தேர ரும் முன்வைக்கிறார். விடயங்கள் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன.

அமெரிக்கா தொடர்பில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்படுவது புதிய விடயமல்ல. இலங்கையில் இதற்கு முன்னரும் இவ் வாறான குற்றச்சாட்டுகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைக் கப்பட்டிருக்கின்றன. ஆனால், தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங் கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் சூழலில் ராஜபக்ஷக்களின் சகாக் கள் முன்னைய சுலோகங்களோடு மீண்டும் முகம் காட்டுவதை தற் செயலென்று ஒதுக்கிவிட முடியுமா என்பதுதான் கேள்வியாகும்.

# திறந்தவெளி சிறைக்குள்ளேயே இன்றும் தமிழர் வாழ்கிறார்கள்!

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 01

14 பேருக்கு ஒரு படை வீரர் என்ற அடிப்படையில் இலங்கையின் பாதுகாப்பு தரப்பு அமையப் பெற்றுள்ள தாக இலங்கை தமிழ்ரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் தெரிவித்தார்.

திறந்தவெளி சிறைச் சாலைக்குள் இன்றும் தமிழர் கள் வாழும் நிலையே இந்த நாட்டில் உள்ளதாக சிறிதரன் குறிப்பிட்டார்.

படைவீரர்களில் நான்கில் மூன்று பகுதியினர் வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள தாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இத னைக் குறிப்பிட்டார்.

யுத்தம் இல்லாத நாட் டுக்கு ஏன் இவ்வளவு படை யினர் எனவும் சிறிதரன் கேள்வியெழுப்பினார்.

சொந்த நாட்டுக்குள் ளேயே அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் நிலங்களை விடுவிப்பதற்கான நேர்த்தி யான வேலைத்திட்டத்தை எந்த அரசாங்கமும் இது வரை செய்யவில்லை என்பது தான் கவலைக்குரிய விடயம் என அவர் தெரிவித்தார். (அ)

# அரசாங்கம் மாறிவிட்டது அரசு இன்னும் மாறவில்லை

## அமைச்சர் லால்காந்த சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 01

அரசாங்கம் மாறினாலும் அரசு இன்னமும் மாற வில்லை என்பதால் அரச ஊழியர்கள் பழைய முறை யின் கீழேயே இன்னமும் பணியாற்றி வருகின்றனர் என அமைச்சர் கே. டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி ஹலொலுவ பிரதேசத்தில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசு மற்றும் அரசாங்கம் என்பது வேறு வேறானவை. அரசாங்கம் புதியது. அரசு பழையது. இங்கு பழைய அரசு ஆனால், புதிய அரசாங்கம் உள்ளது. பழைய அரசாங்கங்களுக்கு ஒரு கலாசாரம் இருந்தது. அது ஊழல் மிகுந்தது - எமது அரசாங்கம் வேறானது.

அரசை வழிநடத்தும் அதிகாரமே எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கத்தில் நாம் விரும் புவதை நடைமுறைப்படுத்த ஓர் அரசாக அனைவரும் தயாராக இல்லை. இன்னும் பழைய அரசுதான் உள்ளது. பழைய தவறுகள் இன்னும் நடக்கின்றன. அரசாங்கத்தின் தவறை சரி செய்துள்ளோம். ஆனால், அரசு அதிகாரிகள் இன்னமும் மாறவில்லை.

எனவே, நாட்டைக் கட்டி யெழுப்ப முழு அரசும் மாற வேண்டும். அரசாங்கம் என்பது அரசை வழிநடத் தும் கருவியாகும். அந்தப் பணியையே நாங்கள் செய்து வருகிறோம் - என்றார். (ஐ)

# ஊழல் விசாரணைகளை ரணில், மைத்திரி தடுத்தனர்!

## அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, மார்ச் 01

நல்லாட்சி அரசாங்கத் தின் போது முன்னாள் ஜனா திபதிகளான மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரம சிங்கவும் நூற்றுக்கணக்கான ஊழல் மற்றும் மோசடி வழக்குகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள் ளாமல் நிறுத்திவிட்டனர் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜய பால தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று அவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

நல்லாட்சி அரசாங்கத் தின்போது இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல் களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பா ளராக நான் பணியாற்றி னேன்.

இதன்போர் எமக்கு 1,200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் 500 முறைப்பாடுகள் நிதி குற்ற புலனாய்வு பிரிவு மற்றும் குற்ற புலனாய்வு போன்ற வற்றுக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

இருப்பினும், அப்போ தைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் அப்போ தைய பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவும் சில அரசியல் ஒப்பந்தங்களில் ஈடுபட்ட பின்னர் இவற்றில் பலவற்றை நிறுத்தினர். ஆனால், தற் போதைய அரசாங்கம் இந்த முறைப்பாடுகளில் பெரும் பாலானவைமீதான விசார ணைகளை மீண்டும் ஆரம் பித்துள்ளது - என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் -01 சனிக்கிழமை
குரோதி வருடம் - மாசி 17
நல்ல நேரம் : 7.31-9.00
ராகு காலம் : 9.00 -10.30
திதி :துவிதியை




**மேடம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். விஜபிகள் அறிமுகமாவார்கள். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
இன்றைய நாள் கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும் மகிழ்ச்சி தங்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நன்மை நடக்கும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை கைகூடி வரும். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். ஆடை ஆபரணம் சேரும்.

**கன்னி**
உங்களை சுற்றி இருப்பவர்கள் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். புது வேலை அமையும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். கடனாககொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வந்து நீங்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**மீனம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும். உடல்நலத்தில் கவனம் தேவை.

# ‘சாந்தன் துயிலாலயம்’ திறப்பு

*யாழ்ப்பாணம், மார்ச்.01*

எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் “சாந்தன் துயிலாலயம்“ நேற்றுக் காலை 09 மணியள வில் சாந்தனின் தாயாரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைதாகி 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.

அவரது உடல் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்திலேயே “சாந்தன் துயிலாலயம்“ அமைக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

(எ-02-05)





# மூளாயில் இலவச கண் பரிசோதனை

*யாழ்ப்பாணம், மார்ச்.01*

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இலவச கண் பரிசோதனை மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் சி. மயூரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிமுதல் 12.00 மணிவரை இந்து இளைஞர் மன்ற பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், பிரதம விருந்தினராக பிரதேச சபை செயலாளர் ச. பாலரூபனும்,

சிறப்பு விருந்தினராக முருகையா சாரதாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ)

# யாழ்ப்பாணத்தில் மதுபோதையில் பஸ்ஸில் ஏற முற்பட்டவரால் பரபரப்பு

*யாழ்ப்பாணம், மார்ச்.01*

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் காலை 10. 30 மணயளவில் மதுபோதையில் பேருந்தில் ஏற முற்பட்டவரால் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ். நகரப் பகுதியில், கஸ்தூரியார் வீதியில் சென்ற பேருந்தை மறித்த குறித்த நபர் அதில் ஏற முற்பட்டார். அதிகளவு மதுபானத்தை அருந்தியதால் அந்த நபரால் பேருந்தில் ஏற முடியாமல் கீழே விழுந்தார்.

அவரை விட்டு விட்டு பேருந்து செல்ல முற் பட்ட போதும் குறித்த நபர் பேருந்தின் சக்கரத்துக்கு முன்பாக காலை வைத்து ஆபத்தான விதத்தில் செயல்பட்டு பேருந்தை செல்லவிடாது தடுத்தார்.

பின்னர் பேருந்தில் இருந்தவர் கீழே இறங்கி அவரை தூக்கி வீதியின் ஓரமாக விட்ட நிலையில் பேருந்து பயணத்தை தொடர்ந்தது. (எ-05)

# பிறவுண் வீதியில் 3 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

யாழ். பிறவுண் வீதியில் மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது.

பிறவுண் வீதிச் சந்தியில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துள்ளானதுடன் வீதியில் நின்றிருந்த மோட்டார் சைக்கிளொன்றையும் ஓட்டோ மோதித் தள்ளியது.

இந்த விபத்து தொடர்பான சி. சி. ரிவி காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.



மேலும், குறித்த சந்தியில் நாளாந்தம் தொடர்ச்சியாக வாகனங்கள் மோதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, குறித்த சந்தியில் வீதிச் சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட வேண்டுமென தொடர்ச்சியாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போதாவது புத்திசாலித்தனமாக நாட்டுமக்கள் முடிவெடுக்கவேண்டும்

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 01

**நாட்டு மக்கள் எப்போதுமே மேடைப் பேசுக்களுக்கும், மேடைக் கதைகளாலும் ஏமாற்றப்படுகிறார்கள். ஏமாறுகிறார்கள். அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சுக்களுக்கும் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் காணப்படும் இடைவெளியை இப்போதாவது நாட்டு மக்கள் நன்றாக புரிந்து புத்திசாலித்தனமாக தமது அரசியல் முடிவுகளை எடுக்கவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் விளைவுகளை மக்கள் அனுபவிக்க நேரிடும். தேசிய பாதுகாப்புக்கு பதிலாக சமூகமே பாதுகாப்பற்ற நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அனுராதபுர நகரில் நேற்றுக் காலை அட்டமஸ்தானத்தை வழிபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்தக் குற்றங்களைத் தடுக்க எதிர்க்கட்சியின் ஆதரவை அரசாங்கம் கேட்பதற்கு முன்னமே நாம் எமது ஆதரவை தெரிவித்து விட்டோம். இந்த அரசாங்கத்திற்கு நாட்டை ஆளும் தொலைநோக்குப் பார்வையும் நோக்கும் இல்லை. மேடைகளில் கனவு உலகங்களை உருவாக்குவதும், நாட்டை ஆள்வது என்பதும் இரு வேறு விடயங்களாகும்.

எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்திக்கு இந்நேரத்தில் உள்ள ஒரே சவால் மக்களை நன்றாக வாழ வைப்பதாகும். மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பேச்சாலும் செயலாலும் மக்களின் துன்பத்தைப் போக்க எம்மாலான சகல வழிகளிலும் முயற்சிப்போம். நடவடிக்கை எடுப்போம். செயல்படுவோம். அன்னிய நேரடி முதலீட்டைக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்ல வேண்டும். அரசாங்கமானது இதனையே ஆற்ற வேண்டும். இதற்கு பாரிய மூலோபாயத் திட்டமொன்று தேவை. அவ்வாறான திட்டம் இந்த அரசாங்கத்திடம் இல்லை.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தின் மூலம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 வீதம் நமது நாட்டின் முதன்மைச் செலவினமாக மாற்றப்பட்டுள்ளது. முதன்மை இருப்பு 2.3 ஆக பேணிச் செல்ல வேண்டும். என்றாலும், இந்த வரம்பு காரணமாக, நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வளங்கள் இழக்கப்படுகின்றது. இதனால், 2028 கடனை அடைப்பது கனவாகவே காணப்படுகின்றது. நாடு இவ்வாறே சென்றால், 2028 இல் எம்மால் கடனை அடைக்க முடியாது. இது தொடர்பான எச்சரிக்கைகள் கூட பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது கடன் மறுசீரமைக்கு செல்ல வேண்டி நேரிடும் போல் தெரிகிறது. இந்த விடயங்களை மக்களிடம் இருந்து மறைத்து வருகின்றனர்-என்றார். (அ)

# தேசிய பாதுகாப்பை அரசு குறைத்து மதிப்பிடவில்லை

## அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, மார்ச் 01

நாட்டின் தேசிய பாதுகாப்பை அரசாங்கம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடவில்லை என்றும் அதற்கான தீர்மானங்கள் முறையாக நடை முறைப்படுவதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தலைமையில் தேசிய பாதுகாப்புச் சபை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கூடுகிறது.

இங்கு மேற்கொள் ளப்படும் தீர்மானங்கள், முறை யாக நடைமுறை ப்படுத்தப்படுகின்றன.கைது செய்யப்படும் சந்தேக நபர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

விசேட சுற்றறிக்கைக்கு இணங்க இதற்கான நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சட்டத்தின் ஆட்சி, வெளிப் படைத்தன்மை, சுயாதீனம் மற்றும் மக்கள் நம்பிக்கை உள்ளிட்ட அடிப்படை கொள்கைகளுக்கு அமைவாகவே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

அரசாங்கம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதனை குறிப்பிட்டுள்ளது.கடந்த இரண்டு வாரங்களில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்ற பல துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பொதுமக்களின் அன்றாட வாழ்வில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 12 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

குற்றச் செயல்களை குறைப்பதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.நாடளாவிய ரீதியில் பாதுகாப்புக்காக முப்படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். -என்றார். (அ)

# கோட்டாபயவுக்கு நடந்ததை சிந்தித்துப் பார்க்கவேண்டும்

## அரசுக்கு ரோஹித எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 01

அரசாங்கம் நிரந்தரமானது அல்ல, தற்காலிகமானதே. அரசாங்கத்துக்கு பெரும்பான்மை உள்ளது. ஆகவே, அரசாங்கத்தை அசைக்க முடியாது என்று குறிப்பிடுபவர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்த கதியை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்க்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மிகவும் திறமையானவர் என்பதை முதலில் குறிப்பிடவேண்டும்.

3 சதவீதமாக இருந்த வாக்குகளை அதிகரித்து தமது கட்சியை ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளமையினால் அவர் திறமையானவரே. இப்போது கன்னி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மக்களின் ஆதரவு கிடைக்கும். இல்லாவிட்டால், மக்களின் எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடும் என்பதையும் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையாக 2200 பில்லியன் ரூபா உள்ளது. எதிர்பார்க்கும் செலவுக்கு திறைசேறியின் ஊடாக நிதியை தேட முடியுமா? இதில் சவால்கள் உள்ளன. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற மதுவரி மற்றும் இறைவரி திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களின் ஊடாக வருமானத்தை அதிகரிக்க வேண்டும். இவற்றின் ஊடாக வருமானத்தை அதிகரிக்க முடியாமல்போனால் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

வழங்கிய வாக்குறுதிகளில் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. எரிபொருள் வரிகளை குறைப்பதாக குறிப்பிடப்பட்டது. அது செய்யப்பட்டதா? மின் கட்டணத்தை மூன்றில் இரண்டாக குறைப்பதாக குறிப்பிடப்பட்டது. ஆனால், அதுவும் நடக்கவில்லை. தற்போதைய நிலைமையில் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக கூறப்பட்டது.

நாங்கள் 20 வருடங்களுக்கு அரசாங்கத்தை வழங்கவோ அரசாங்கத்தை அசைக்கவோ இடமளிக்கப் போவதில்லை என்று அரசாங்கத்தில் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு கூறி தவறிய இடங்கள் உள்ளன. கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தபோதும் நாங்கள் இப்படித்தான் கூறினோம். இவ்வாறு கூறித் தான் கவிழ்ந்தோம். இந்த அரசாங்கம் நிரந்தரமானது என்று எவரும் நினைக்கக் கூடாது-என்றார். (அ)

# 39 ஆலோசகர்களை நியமித்து சம்பளம் வழங்கி ரணில் மோசடி

## ஹர்ஷன நாணயக்கார குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 01

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரச நிதியை மோசடி செய்துள்ளார். அடிப்படை காரணிகள் ஏதுமில்லாமல் 39 ஜனாதிபதி ஆலோசகர்களை நியமித்தார். இவர்கள் செய்த வேலை ஏதும் கிடையாது. ஆனால் அவர்களுக்கு அதிகளவில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் மக்களின் வரிப்பணத்தை மோசடி செய்த ஒரு செயற்பாடாகும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் அரச நிதி செலவுகளை இயலுமான வகையில் குறைத்துள்ளோம். அரச தலைவர்களும் சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம். மக்களின் வரிப்பணத்தை அவதானத்துடன் பயன்படுத்துகின்றோம்.

அரச நிதி மோசடி மற்றும் வீண் விரயத்தினால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. வங்குரோத்து நிலையிலும் கடந்த காலங்களில் மோசடிகளும்,அரச சலுகைகளும் குறைக்கப்படவில்லை. மக்களின் மீதே ஒட்டுமொத்த சுமையும் சுமத்தப்பட்டது. ஆட்சியாளர்கள் தமக்கும், தமது ஆதரவளார்களுக்கும் தேவையான சலுகைகளை ஒதுக்கிக் கொண்டு மக்கள் தமது செலவுகளையும், தேவைகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

2022 ஆம் ஆண்டு கோட்டபய பதவியை விட்டு தப்பியோடியதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க புண்ணியத்துக்காக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.இவர் படித்தவர்,சிறந்தவர் என்று புகழ்ந்தார்கள். ஆனால் அவர் திருடர், மோசடியாளர் என்று நான் குறிப்பிடுகிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 39 ஆலோசகர்கள் இருந்தார்கள். ஜனாதிபதிக்கு ஆலோசகர்கள் இருக்கலாம் அதில் பிரச்சினையொன்றுமில்லை. ஏனெனில் ஜனாதிபதி அனைத்தையும் அறியமாட்டார். ஆனால் ரணில் விக்கிரமசிங்க 39 ஆலோசகர்களை வைத்துக் கொண்டுள்ளார்.அவ்வாறாயின் அவருக்கு ஏதும் தெரியாதா, தமது நண்பர்களை மகிழ்விப்பதற்காக தற்காலிக பதவிகளை வழங்கியுள்ளார் அமைச்சின் செயலாளர்களின் விடயதானங்களுக்கு உள்ளடங்கும் பணிகளுக்காகவே ஜனாதிபதியின் ஆலோசகர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆலோசகர்கள் செய்த வேளையை ஆராய்ந்து பார்த்தேன், அவர்கள் பொய்யாக கூட வேலை செய்யவில்லை. வேலை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது என்னவென்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதிக சம்பளத்தையும், சலுகைகளையும் முறையாக பெற்றுக்கொண்டுள்ளார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் ஆசு மாரசிங்க பாடசாலையில் கல்வி கற் றுக் கொண்டிருந்தார்-என்றார். (அ)

# தொலைத்தொடர்பு ஆணைக்குழு பணமோசடி குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 01

தொலைபேசி நிறுவனங்களின் பிரதிநிதிகளாக தங்களை அடையாளங்காட்டிக்கொண்டு, பரிசுகளை வென்றுள்ளதாக கூறி மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் மோசடி குறித்து இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு மோசடி செய்பவர்கள், தனிநபர்களிடம் பரிசு வென்றுள்ளதாக தெரிவித்து, குறுஞ்செய்திகள் அல்லது தொலைபேசி அழைப்புகள் மூலம்அவர்களை தொடர்பு கொண்டு பரிசுகளைப் பெற வரி அல்லது கட்டணங்களைச் செலுத்துமாறு மோசடிக்காரர்கள் பண மோசடியில் ஈடுபடுவதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரன விளக்கம் கொடுத்துள்ளார்.இது குறித்து பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவும், இதுபோன்ற மோசடிகளுக்கு உட்படாமல் இருக்கவும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளதோடு எந்தவொரு பரிசு கோரிக்கைகளின் நம்பகத்தன்மையை சரிபார்க்கவும், தேவையற்ற செய்திகள் அல்லது அழைப்புகளின் அடிப்படையில் எந்தப் பணத்தையும் செலுத்த வேண்டாம் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவினரின் மோசடிகளுக்கு அநுரவும் பொறுப்பு கூறவேண்டும்!

## சபையில் கூறினார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, மார்ச் 01

**மக்கள் விடுதலை முன்னணி 2005இல் எடுத்த தவறான தீர்மானங்களின் பெறுபேறாகவே தற்போது ராஜபக்ஷவினரின் மோசடிகள் தொடரபில் கதைக்க வேண்டியுள்ளது. அதனால் அவர்களின் ஊழல் மோசடிகளுக்கு தற்போதைய அரசாங்கமும் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செலவின தலைப்பின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2005ஆம் ஆண்டில் ராஜபக்ஷவினரை இப்போது ஆட்சியில் இருப்பவர்களே ஆட்சிக்கு கொண்டு வந்தனர். அப்போது நான் ராஜபக்ஷவினருக்கு எதிரான முகாமிலேயே இருந்தேன். அவர்களை தோற்கடிக்க வேண்டும் என்ற மேடையிலேயே இருந்தேன். ஆனால் ராஜபக்ஷவினர் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்று இப்போது கூறுபவர்கள், அவர் தான் சிறந்த நபர் என்று கூறும் மேடையிலேயே இருந்தனர். நீங்கள் எடுத்த தவறான அரசியல் தீர்மானங்களின் பெறுபேறுகளையே இப்போது நீங்கள் கூறவேண்டி ஏற்பட்டுள்ளது.

ராஜபக்ஷவினர் திருடர்கள் என்று தெரிந்துகொண்டே அவர்களை ஆட்சிக்கு கொண்டு வந்தீர்கள்.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை திட்டத்தில் மோசடி குற்றச்சாட்டில் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் தெரிவிக்கப்பட்டிருந்ததை அறிந்துகொண்டே அவரை பிரதமராக்க மக்கள் விடுதலை முண்ணணி நடவடிக்கை எடுத்திருந்தது.

நீங்கள் அரசாங்கத்தை எடுப்பதற்காக 77ஃ88 காலத்தில் கஷ்டப்பட்டீர்கள். லெனின் அரசாங்கத்தை அமைப்பதாக கூறினாலும் அந்த அரசாங்கத்தை செய்யவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி கூறும் அரசாங்கத்தையே செய்துள்ளீர்கள் மேலும் ராஜபக்ஷவினரின் மோசடிகளை கூறும் போது எங்களை பார்த்து கூறவேண்டாம்.

அன்று நீங்கள் எடுத்த தவறான தீர்மானத்திற்கே இன்று மக்கள் நட்டஈட்டை செலுத்த வேண்டியுள்ளது.

2005 இல் நீங்கள் தனியாக போட்டியிருந் தால் அப்போது ராஜபக்ஷவினர் தோல்வியடைந்திருப்பர். 2005 ஆம் ஆண்டின் பின்னரே இந்த நாட்டில் ஊழல் கலாசாரம், குடும்ப ஆட்சி உருவானது. அதனை நீங்களே கொண்டு வந்தீர்கள். இதில் உங்களுக்கும் பங்கு உள்ளது.

அதனால் நீங் கள் ராஜபக்ஷவினர் தொடர் பில் கூறும் போது எங்களை பார்க்காது ராஜபக்ஷவினரின் படங்களை பார்த்து கூறுங்கள்-என்றார். (அ)

# துப்பாக்கிச் சூட்டுக்கு முதல் நாள் புதிய சிம் வாங்கினார் செவ்வந்தி!

கொழும்பு, மார்ச் 01

கணேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய தற்போது தலைமறைவாகியுள்ள இஷாரா செவ்வந்தி கடுவெல வெலி விட்ட பகுதியில் உள்ள கடையொன்றில் சிம் அட்டை ஒன்றை வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 19 ஆம் திகதி கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்டார்.

அதற்கு முந்தையநாள் 18 ஆம் திகதி துப்பாக்கிதாரி என சந்தேகிக்கப்படும் நபரும் ,இதற்குத் திட்டங்களை வகுத்ததாகத் தெரிவிக்கப்படும் இஷாரா செவ்வந்தியும் வெலிவிட்ட பகுதியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தனர்.

இதன்போதே குறித்த பகுதியில் உள்ள கடையொன்றில் சிம் அட்டை கொள்வனவில் இஷாரா செவ்வந்தி ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஒரு வாரத்தில் விற்பனைக்கு வரவுள்ள இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள்!

கொழும்பு, மார்ச் 01

தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்கள் அடுத்தவாரம் முதல் விற்பனைக்கு வரும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுமார் 5 வருடங்களாக அமல்படுத்தப்பட்ட வாகன இறக்குமதி தடை அண்மையில் தளர்த்தப்பட்டது.

நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட இரண்டாவது தொகுதி வாகனம் நேற்று முன் தினம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

இதற்கமைய, ஜப்பானிலிருந்து 196 வாகனங்கள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி, வெகன் ஆர், அல்டோ, வெசல் உள்ளிட்ட வாகனங்கள் ஜப்பானிலிருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.இந்த வாகனங்கள் அடுத்த வாரமளவில் விற்பனைக்கு வரும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# இருதய சிகிச்சைக்கான 3 மாத்திரைகள் அறிமுகம்!

கொழும்பு, மார்ச் 01

மோரிசன் நிறுவனம் இருதய சிகிச்சைக்காக 3 மாத்திரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை மருந்து உற்பத்தித் துறையில் 60 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்துடன் மோரிசன் நிறுவனம் முன்னோடியாகத் திகழ்கிறது.

இந்த நிறுவனம் இலங்கையில் முதல் முறையாக, இருதய சிகிச்சைக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று மாத்திரைகளை அறிமுகப்படுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் புரிந்துள்ளது.

இந்த புதிய உள்நாட்டு மருந்து உற்பத்தி மூலம் நோயாளிகள் மாத்திரைகளுக்கு செலவிடும் தொகையைக் குறைத்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாத்திரைகளை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் எனினும் எந்தவொரு மருந்தையும் ஏற்றுமதி செய்வதற்கு முன்பு மூன்று ஆண்டுகளுக்கு உற்பத்தி செய்யப்பட்ட நாட்டில் பயன்படுத்த வேண்டும் என அந்த நிறுவனம் கூறியுள்ளது.

வணிக நோக்கம் மாத்திரமின்றி நோயாளிகளின் நலனை அடிப்படையாகக் கொண்டு இந்த மாத்திரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி நிர்வாகக் கூட்டத்தின் பின் ரணில்-சஜித் தரப்பு கலந்துரையாடல் தொடரும்!

கொழும்பு, மார்ச் 01

ஐக்கிய மக்கள் சக்தியின் நிர்வாகக் குழு கூட்டத்திற்கு பிறகு, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிடையே கலந்துரையாடல்கள் தொடரும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த கலந்துரையாடல்கள் தொடர்பில் இறுதி தீர்மானம் ஐக்கிய மக்கள் சக்தியின் நிர்வாகக் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை குறித்த நிர்வாகக் குழு கூட்டம் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் அன்று விடுமுறை தினம் என்பதால் கூட்டம் நடைபெறவில்லை.

அதன்படி, எதிர்வரும் நாள் ஒன்றில் இந்த நிர்வாகக் குழு கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இடையே பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றாலும் எதிர்வரும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் அதன்போது இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை.

இரு தரப்பு கட்சி தலைவர்களினதும் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாத காரணத்தினால் இந்த கலந்துரையாட ல்கள் தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து போட்டியிட்டால் அரசியல் தரப்பில் அதிக இலாபங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதே இரு கட்சிகளினதும் நிலைப்பாடாக காணப்படுகிறது. (அ)

# அரகலய போராட்டத்தில் நட்டஈட்டை பெற்ற மேலும் பலரின் பெயர் விவரம் வெளியானது!

கொழும்பு, மார்ச் 01

அரகலய போராட்டத்தின்போது பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக நட்டஈடு பெற்றுக் கொண்ட மேலும் பலரின் பெயர்களையும் நட்டஈட்டுத் தொகை தொடர்பிலும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றில் விசேட உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, கெஸ்பெவ நகர முதல்வர் லக்ஷ்மன் பெரேரா 696 இலட்சம் ரூபாய் நட்டஈடு பெற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மொறட்டுவை நகர முதல்வர் சமன் லால் பெர்ணான்டோ 73,044,000 ரூபாயும், அவரது மகனான ரமேஷ் சானக பெர்ணான்டோ 1,888,300 ரூபாயையும் நட்டஈடாக பெற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலக்கம் 246, இசுருபுர, சுதந்திர மாவத்தை, டப்ளியு.எம்.ஞானவதி 280 இலட்சம் ரூபாயும் நட்டஈடாக பெற்றுக் கொண்டுள்ளதா அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-14 ஆணைக்குழுக்களை நியமித்து ஆணைக்குழுக்களுக்காக 5301 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. அந்த 14 ஆணைக்குழுக்களும் வழங்கிய அறிக்கையின் நட்டஈடுகளுக்காகவே இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் 1221 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. உறவினர்களுக்கு 1125 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தான் ஆணைக் குழுவை நியமித்துச் செலவு செய்துள்ளார்கள். இறுதியில் அதை மட்டும் தான் செய்துள்ளார்கள்.

இந்த நாட்டு மக்க ளுக்கு முக்கியமாகவுள்ள ஈஸ் டர் தாக்குதல், அரச நிதியை மோசடி செய்தமை ஆகிய விடயங்களுக்காகச் செலவிடப்படவில்லை. அந்த ஆணைக்குழுக்கள் எதற்காக நியமிக்கப்பட்டுள்ளன? அந்த சந்தர்ப்பத்தில் எழுந்த அரசியல் போராட்டத்தை மூடி மறைக்கவே தவிர வேறு எந்த தேவைக்காகவும் இல்லை. அதற்கும் 5000 இலட்சத்திற்கும் அதிகமான தொகை செலவு செய்யப்பட்டுள்ளது-என்றார். (அ)

# அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்குரிய விண்ணப்பங்களை ஏற்கக் காலவரையறை

கொழும்பு, மார்ச் 01

2025 ஆம் ஆண்டு அரசியல் கட்சிகளாக அங்கீகரிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் பெப்ரவரி 28 ஆம் திகதியிலிருந்து மார்ச் 28 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்களை மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம் .

சரண மாவத்தை, இராஜகிரிய, 10107 என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் கட்சியின் செயலாளரால் கையொப்பமிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலும், விண்ணப்பப் படிவத்துடன் கட்சியின் யாப்பு, கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள் ,

கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம், கட்சியின் பதவித்தாங்குநர்களின் குழுவிற்கு குறைந்தபட்சம் ஒரு பெண் அலுவலர் உள்ளடங்கப்படுதல் மற்றும் அரசியல் கட்சியாக இயங்தியுள்ளமையை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகளும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://www.elections.gov.lk/ என்ற இணையத்தளத்தைப் பிரவேசியுங்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் ஊடகப் பேச்சாளராக சிறிவர்தன!



கொழும்பு, மார்ச் 01

2025 ஆம் நடப்பாண்டுக்கான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஊடகப் பேச்சாளராக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி இவருக்கான நியமனக் கடிதம் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (அ)

## கணேமுல்ல சஞ்சீவ விவகாரம் நீதிமன்றில் இரகசிய அறிக்கை!

கொழும்பு, மார்ச் 01

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கும்பல் உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் நீதிமன்றில் இரகசிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட கொழும்பு குற்றப் பிரிவினர், கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலியின் அலுவலகத்தில் இது தொடர்பான அறிக்கையை வழங்கியுள்ளனர்.

நீதிமன்றமும் பொலிஸாருக்கு பல உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் குழுவிடமும் வாக்குமூலம் பெறப்படவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி காலை, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் 05 ஆம் இலக்க நீதிமன்ற அறையில் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கூண்டில் இருந்த கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டார். (அ)

# 1,400 பில்லியன் ரூபா மூலதன ஒதுக்கீட்டை பயனுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்துக!

### ஜனாதிபதி மாவட்ட செயலர்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 01

**ஆயிரத்து 400 பில்லியன் மூலதன ஒதுக்கீட்டை அடுத்த 08 மாதங்களில் கிராமிய மட்டத்திலான பயனுள்ளதிட்டங் களுக்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மாவட்டச் செயலாளர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதால் நாட்டின் பொருளாதாரத்தை 3 வீதம் முதல் 4 வீதத்தால் அதிகரிக்க முடியுமென குறிப்பிட்ட ஜனாதிபதி பொருளாதாரத்தை கிராமத்தை நோக்கி நகர்த்தும் போது தற்போது உள்ள பொருளாதார வாய்ப்புக்களை பலப்படுத்த முடியுமென குறிப்பிட்டார்.

மேலும் புதிய வாய்ப்புக்களை அறிந்துகொள்வதற்கான அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

மேலும் அரச சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லெண்ணம் கிடையாது எனவும், அதற்கு வினைத்திறன் இன்மையே காரணமாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, திருப்திகரமான அரச சேவையை உருவாக்கி அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2025 வரவு-செலவுத் திட்ட பரிந்துரைகளில் முன்வைக்கப்பட்டுள்ள சம்பள மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டது.

தற்போதும் அரச சேவையில் 30 ஆயிரம் வெற்றிடங்கள் அறியப்பட்டிருப்பதால், அதற்காக ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும்,

அதனால் அரச சேவையின் நடுத்தர பணி யாளர்களுக்கான வெற்றிடங்கள் முழுமையடையும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அபிவிருத்தி என்பது கட்டடங்கள், பாலங்களை கட்டுவது மாத்திரமல்ல எனவும் வீழ்ச்சியடைந்திருக்கும் சமூகக் கட்டமைப்பை உயர்த்தி வைக்க வேண்டியது அவசியம் எனவும் அதில் முதன்மைப் பணி மாவட்ட செயலாளர்களை சார்ந்திருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மேலும், இதன்போது மாவட்டங்களுக்கு அமைவான பிரச்சினைகள் குறித்து அரசாங்க அதிபர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்ததுடன், அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான முன்மொழிவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன,

ஜனாதிபதி யின் செயலாளர் கலாநிதி நந்திக்கனத் குமநாயக்க, அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார மற்றும் மாவட்ட செயலாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான விசாரணைகளை முடிவுக்குக் கொண்டு வருக!

### சபையில் ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 01

நாட்டில் இடம்பெற்ற போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு விசாரணைகளை அரசாங்கம் விரைவாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் அல்லது அந்த வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செலவின தலைப்பின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-போராட்டக்காரர்களை அடக்குவதற்கு அவர்களுக்கு எதிராக பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளில் போராட்டக்காரர்களுக்காக முன்வந்த சட்டத்தரணிகள் தற்போது அமைச்சர்களாகவும் இருக்கின்றனர். நாட்டில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னணியிலேயே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அதனால் இது தொடர்பாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வழக்குகள் தொடர்பில் சட்ட மா அதிபருக்கு அறிவிக்க வேண்டும். அல்லது இந்த வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கடந்த அரசாங்க காலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வீதிக்கிறங்கி போராட்டம் மேற்கொண்டு, தங்களுக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு அப்போதிருந்த அரசாங்கத்திடம் கோரி வந்தனர். தற்போது அவர்கள் நீதிமன்றங்களில் அலைக்கழிக்கப்பட்டு வருகின்றனர்.

அது மாத்திரமல்லாது அவர்களின் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் தடை செய்யப்பட்டு, அவர்களுக்கு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் அரசாங்கம் இவர்களுக்கு நியாயம் வழங்கும் வகையில், அவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு விசாரணைகளை விரைவாக முன்னெடுத்து முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒன்பது வயது சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 01

ஹெட்டிபொல, மகுலகமவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒன்பது வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிறுமியும் அவரது பாட்டியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமி மகுலகம பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

அதேநேரம், காயமடைந்த பெண் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதுடன், உயிரிழந்த சிறுமியின் சடலம் குளியாப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின்படி, துப்பாக்கிச் சூடு நடந்தபோது, காட்டுப்பன்றிகளை வேட்டையாட மக்கள் உரத்த குரலில் சத்தம் போட்டதைக் கேட்டு சிறுமியும் அவரது பாட்டியும் தங்கள் வீட்டுக்கு வெளியே வந்தனர்.

இதன்போது, அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட 12 போர் ரக துப்பாக்கியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஆனால், துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

அவரைக் கண்டறிய ஹெட்டிபொல பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டு குழுக்கள் மோதல் சகோதரர்கள் இருவர் பலி!

கொழும்பு, மார்ச் 01

பத்தேகம, மத்தெவில பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இரு சகோதரர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மரண வீடொன்றில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வின்போது இரு குழுக்களிடையே மோதல் சம்பவம் ஏற்பட்டது.

சம்பவத்தில் சகோதரர்கள் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, காயமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து பத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## 2025 ஜனவரி மாதம் இலங்கையின் ஏற்றுமதி வலுவான ஆரம்பத்தில்!

கொழும்பு, மார்ச் 01

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 1.334 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது ஆண்டின் நம்பிக்கைக்குரிய தொடக்கத்தைக் குறிக்கிறது.அதேநேரம் இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10.3 வீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

ஜனவரி 2025 இல் பொருட்கள் ஏற்றுமதி செயல்திறன் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இருந்தது, இது ஜனவரி 2024 உடன் ஒப்பிடும் போது 3.51வீத அதிகரிப்பைக் குறிக்கிறது என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிக்கின்றது.

ஆடை மற்றும் தேயிலை, தேங்காய் சார்ந்த பொருட்கள், வைரங்கள், இரத்தினங்கள் மற்றும் நகைகள், மசாலா பொருட்கள், உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியின் வருவாய் அதிகரிப்பால் பொருட்கள் ஏற்றுமதியின் அதிகரிப்பு முதன்மையாக உந்தப்பட்டது.

இதற்கிடையில், 2025 ஜனவரி மாதத்திற்கான சேவைகள் ஏற்றுமதிகள் 329.37 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 37.87 வீத அதிகரிப்பைப் பிரதிபலிக் கிறது.

இலங்கையின் சிறந்த 15 ஏற்றுமதிச் சந்தைகளில், அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் அனைத்தும் இந்த மாதத்தில் சாதகமான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## மட்டக்களப்பு மக்களுக்கு விழிப்புணர்வு



மட்டக்களப்பு, மார்ச்.01

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், நோய்ப்பாதிப்பு வீதத்தை குறைக்கும் நோக்கில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

சுகாதார அமைச்சால் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றமையால் பொதுமக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை கல்லடி பாலத்திலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி நகரின் பிரதான வீதிகள் ஊடாக மட்டக்களப்பு நகரைச் சென்று பின்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை வந்தடைந்தது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சு. முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு செயல்திட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் என். தனஞ்சயன்,

மருத்துவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் கள், தாதியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் தொழு நோயைத் தடுக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஏந்திச் சென்றனர். (எ)

# மருத்துவமனைகள் முன்பு தாதியர்கள் ஆர்ப்பாட்டம்!



கல்முனை, மார்ச்.01

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தாதியர்கள் கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆதார மருத்துவமனைகளின் முன்பாக ஒன்று கூடி நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

2025 வரவு - செலவுத் திட்டத்தில் தன்னிச்சையாக கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கு முன்பாக ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச தாதியர் சங்கம் தெரிவித்திருந்தது.

இதற்கமைய, நோயாளிகளுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆதார மருத்துவமனைகளில் கடமையாற்றும் சில தாதியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, குறித்த போராட்டமானது மருத்துவமனை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது எனவும் நண்பகல் 12: 00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை மதிய உணவு இடைவேளையில் போராட்டம் நடத்தப்படும் என சங்கத்தின் உப தலைவர் நாலக ஹெட்டியாராச்சி தெரிவித்திருந்தார். (எ-01)

# காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பிரச்னைகள் குறித்து ஆராய்வு



காத்தான்குடி, மார்ச்.01

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்னைகள் குறித்தும் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவுடன் காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்த சந்திப்பொன்று கடந்த 26 ஆம் திகதி சம்மேளன கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் பாராளு மன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவுக்கு நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்பட்டது.

புதிய அரசமைப்பு தொடர்பாக சம்மேளனத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான செயல் பாடுகளின் அடுத்த கட்ட நகர் வாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு அல் மனார் கல்லூரியில் திறந்து வைப்பு

கல்முனை, மார்ச்.01

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பைசால் காசிமின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திலுள்ள மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரிக்கான உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார பிரதி அமைச்சராக இருந்த காலப்பகுதியில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ஏ.எம். ரகீப்பின் கோரிக்கைக்கு அமைவாக மருதமுனை அல்- மனார் கல்லூரிக்கு 5. 2 மில்லியன் ரூபாய் செலவில் உள்ளக




பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு அமைக்கும் ஆரம்ப கட்ட வேலைத்திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டிருந்த வேளையில் அதன் இறுதிக்கட்ட பணிகளுக்கு முன்னாள் பாரளு மன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப்பின் நிதி ஒதுக்கீட்டில் பூர்த்தி செய்யப்பட்டன.

இந்த நிலையில், குறித்த பூப்பந்தாட்ட விளையாட்டரங்கை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எம்.எம் முஷாரப் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர், கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் போன்றோரும் கலந்து கொண்டனர். (எ)

## தேசிய சமூக விஞ்ஞான போட்டியில்

# காரைதீவு மாணவன் குகேஸ் பதக்கங்கள் பெற்று சாதனை

காரைதீவு, மார்ச்.01

கல்வி அமைச்சு நடத்திய தேசிய மட்ட 2024 ஆம் ஆண்டுக்கான சமூக விஞ்ஞானப் போட்டிகளில் காரைதீவு மாணவன் சத்தியநாதன் குகேஸ் இரு பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவனான எஸ். குகேஸ், அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடம்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், தேசிய மட்டத்தில் 3ஆம் இடம் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

தேசிய மட்டத்திலான இப்போட்டியில் கிழக்கு மாகாணம் முதல் நிலையைப் பெற்றிருப்பதுடன் மாகாணத்தில் 6 இடங்களையும் தேசிய மட்டத்தில் ஓர் இடத்தையும் பெற்று கல்முனை வலயம் கிழக்கு மாகாணத்தில் 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.



வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. (எ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு

அட்டாளைச்சேனை, மார்ச்.01

அம்பாறை, அட்டாளைச் சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பிரிவில் இயங்கி வருகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை வழிகாட்டி விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ. எம். எம். இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் அட்டாளைச் சேனை பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்பள்ளிகள் எவ்வாறு அமைய வேண்டும், அங்கு எவ்வாறான விடயங்கள் உள்ளடங்க வேண்டும் என்ற விழிப்புணர்வு தகவல்களை மருத்துவர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் வழங்கினார்.

மேலும், சிறார்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் போன்றனவற்றை எவ்வாறு செய்து கொடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கான நற்பண்புகள், நல்லெண்ணங்கள், நற்சிந்தனைகள் போன்றனவற்றை எவ்வாறு போதிக்க வேண்டும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் அவர்களுக்குத் தேவையான போசாக்கு நிறைந்த உணவுப் பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் மருத்துவர் இஸ்ஸடீன் எடுத்துரைத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வான் எல்லையில் சீன இராணுவம் பயிற்சி

## தாய்வான் இராணுவம் கடும் கண்டனம்

பீஜிங், மார்ச்.01

**தாய்வான் கடற்பகுதியில் சீன இராணுவம் துப்பாக்கிச்சூடு பயிற்சியில் ஈடுபட்டது. இதனால், அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.**

சீனாவின் கட்டுப்பாட்டிலிருந்த தாய்வான் 1949இல் தனிநாடாக பிரிந்தது.

ஆனால், தாய்வானை இன்னும் தனது நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதுகிறது.

எனவே, அதனை மீண்டும் தன்னுடன் இணைக்கப் போர்ப் பயிற்சியை நடத்தி சீனா பதற்றத்தை தூண்டுகின்றது.

இதன் ஒரு பகுதியாக தாய்வான் கடற்பகுதியில் சீன இராணுவம் நேற்று துப்பாக்கிச் சூடு பயிற்சியில் ஈடுபட்டது. மேலும், 4 சீன போர்க்கப்பல்கள் மற்றும் 45 விமானங்கள் தாய்வான் எல்லைக்குள் கண்டறியப்பட்டன.

சீனாவின் இந்த நடவடிக்கைக்கு தாய்வான் இராணுவம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (எ)

# ரஷ்யாவுக்கு தொடர்ந்தும் உதவுகிறது வடகொரியா!

## தென்கொரிய உளவு நிறுவனம்

பியாங்க்யாங், மார்ச்.01

ரஷ்யாவுக்கு வடகொரியா கூடுதல் இராணுவத்தினரை அனுப்பியுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் உள்ளன. அவற்றின் ஆயுத விநியோகம், பொருளாதார உதவியால் போரில் உக்ரைன் தொடர்ந்து தாக்குப்பிடித்து நிற்கிறது. அதேபோன்று, ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ஆதரவாகச் செயல்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக வடகொரியா 10 ஆயிரம் இராணுவத்தினரை ரஷ்யாவுக்கு அனுப்பியது. அவர்கள் உக்ரைன் எல்லை அருகே உள்ள குர்ஸ்க் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டனர்.

ஆனால், கடுமையான பனி மற்றும் உக்ரைனின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் அவர்களில் பலர் பலியாகினர். இந்த நிலையில் ரஷ்யாவுக்கு கூடுதல் இராணுவத்தினரை நேற்று முன்தினம் வடகொரியா அனுப்பியுள்ளதாக தென்கொரிய உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# போர் நிறுத்த ஒப்பந்த பேச்சுகளுக்கு தயார்

## ஹமாஸ் அமைப்பு அறிவிப்பு

காஸா, பெப்.01

போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கான அடுத்த கட்ட பேச்சுக்களுக்குத் தயார் என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையேயான மோதல் போக்கானது பல வருடங்களாக நீடித்து வருகிறது. பலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காஸாவை ஹமாஸ் அமைப்பினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்த சூழலில், இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் தாக்குதல் நடத்தியது.

இந்தச் சூழலில், போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் இஸ்ரேல் பணயக் கைதிகள் மற்றும் பலஸ்தீனிய கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். இதில், முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் இந்த வார இறுதியில் முடிவுக்கு வருகிறது. இந்தச் சூழலில், இரு தரப்பிலும் ஒப்புக் கொண்டதன்படி, பரஸ்பரம் கைதிகள் விடுவிப்பு நேற்று முன்தினமும் நடந்தது.

இதன்படி, இஸ்ரேல் பணயக் கைதிகள் 4 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்துள்ளது. இதற்கு ஈடாக, இஸ்ரேல் பிடித்து வைத்திருந்த 600இற்கும் மேற்பட்ட பலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

2ஆவது கட்ட பேச்சுக்கள் இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. இந்த நிலையில், காஸா முனை பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கான அடுத்த கட்ட பேச்சுக்களுக்கு தயாராக இருக்கிறோம் என ஹமாஸ் அமைப்பு நேற்று அறிவித்துள்ளது.

இதுபற்றி அந்த அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில், மீதமுள்ள பணயக் கைதிகளைப் பாதுகாப்பாக விடுதலை செய்வதற்கு இஸ்ரேலுக்கு உள்ள ஒரே வழி பேச்சுவார்த்தை நடத்துவது மற்றும் ஒப்பந்தத்தின்படி நடப்பது மட்டுமேயாகும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து பின் வாங்கும் எந்த வொரு முயற்சியும் பிடித்து வைக்கப்பட்டு இருப்பவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பாதிப்பு ஏற்படுத்த மட்டுமே வழிவகுக்கும் என்றும் ஹமாஸ் எச்சரித்துள்ளது. (எ)

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்!

இஸ்லாமாபாத், மார்ச்.01

பாகிஸ்தானில் நேற்று அதிகாலை 05.14 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 4. 5 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக, கடந்த மாதம் 3ஆம் திகதி பாகிஸ்தானில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. (எ)

# பனிமலையில் மோதிய விமானம் நொறுங்கியது

## இங்கிலாந்தில் மூவர் படுகாயம்!

லண்டன், மார்ச்.01

இங்கிலாந்தில் விமானம் ஒன்று பனிமலையில் மோதிய விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

மான்செஸ்டர் நகரில் நேற்று முன்தினம் மாலை சிறிய ரக அம்புலன்ஸ் விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில், விமானி உட்பட மூவர் பயணித்தனர். வெர்மான்ட் என்ற இடத்துக்கு அருகே சென்றபோது அங்குள்ள ஈக்வினாக்ஸ் பனிமலையில் விமானம் மோதியது. இதனால், அந்த விமானம் கீழே விழுந்து நொறுங்கியது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு மீட்புப் படையினர் விரைந்தனர்.

அப்போது, விமானத்திலிருந்த மூவரும் படுகாயமடைந்த நிலையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் அனை வரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (எ)

# சிறைச்சாலையை மேம்படுத்த நாங்கள் போராடவில்லை!

## ட்ரம்ப்புக்கு ஹமாஸ் பதில்




காஸா, மார்ச்.01

"சிறைச்சாலை சூழ்நிலைகளை மேம்படுத்த வேண்டும் என நாங்கள் போராடவில்லை, சிறைச்சாலையையும் சிறை அதிகாரியையும் அகற்றுவதற்காகவே போராடுகிறோம்"- இவ்வாறு ஹமாஸ் அமைப்பின் அரசியல் குழு உறுப்பினர் பாசெம் நயீம் தெரிவித்தார்.

காஸாவை நவீன நகரமாக மாற்றியதுபோல் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் தால் (ஏ.ஐ.) உருவாக்கப்பட்ட வீடியோவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்தார். இந்த வீடியோ புது சர்ச்சையை கிளப்பியிருக்கிறது.

இதுபற்றி ஹமாஸ் சார்பில் பாசெம் நயீம் மேலும் கூறுகையில்," துர திர்ஷ்ட வசமாக, மக்களின் கலாசா ரங்கள் மற்றும் நலன்க ளைக் கருத்தில் கொள் ளாமல் ட்ரம்ப் மீண்டும் தனது கருத்துக்களை முன்மொழி கிறார்.

காஸாவை மறுகட்டமைப்பு செய்து, பொருளாதார மீட்பு, குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்கும் நாளை காஸா மக்கள் ஆவலுடன் எதிர்நோக்கு கிறார்கள். ஆனால், பெரிய சிறைச்சா லைக்குள் இருந்து கொண்டு அத்தகைய வெற்றியை பெற முடியாது. இந்த சிறைச்சாலை சூழ்நிலைகளை மேம்படுத்த வேண்டும் என நாங்கள் போராடவில்லை, சிறைச்சாலையையும் சிறை அதிகாரியையும் அகற்றுவதற்காகவே போராடுகிறோம்"- என்றார். (எ)

# கட்டடத்தில் தீ விபத்து 8 பேர் உயிரிழந்தனர்!



மணிலா, மார்ச்.01

பிலிப்பைன்ஸில் குடியிருப்பு கட்டடத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் மணிலா அருகே உள்ள குயிசான் புறநகர்ப் பகுதியில் சான் இசிட்ரோ காலஸ் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டடத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு தீ விபத்து ஏற்பட்டது. கட்டடத்தின் பெரும் பகுதி மரத்தால் கட்டமைக்கப்பட்டிருந்ததால் தீ மளமளவென பரவி கொழுந்துவிட்டு எரிந்தது.

இந்தக் குடியிருப்பில் இருந்தவர்கள் உறங்கிக்கொண்டிருந்ததால் தீப்பற்றியதை உடனடியாக உணரவில்லை. தீ பரவிய நிலையில், எழுந்து வெளியேறுவதற்குள் தீ சூழ்ந்துவிட்டது. இதனால், சிலர் உள்ளே சிக்கிக்கொண்டனர். தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைத்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். (எ)

# இந்தியாவுக்கு பாடம் எடுக்கும் இடத்தில் பாகிஸ்தான் இல்லை

ஜெனிவா, மார்ச்.01

எங்களுக்குப் பாடம் எடுக்கும் இடத்தில் பாகிஸ்தான் இல்லை என்று இந்தியா பதிலடி கொடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள்கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில் நேற்று முன்தினம் ஜம்மு காஷ்மீர் விவகாரத்தை எழுப்பி, இந்தியா மீது பாகிஸ்தான் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது.

பாகிஸ்தானின் சட்டம், நீதி மற்றும் மனித உரிமைகள் துறை அமைச்சர் அஸாம் நசீர் டரார் கூறுகையில், "காஷ்மீரில் வசிக்கும் மக்கள் சுயமாக முடிவெடுக்கும் உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. ஐ.நாவின் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச சட்டங்கள் மீறப்படுகின்றன. தொடர்ந்து, மனித உரிமைகளும் மீறப்படுகிறது. உடனே இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும்"- என்றார்.

பாகிஸ்தானின் இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்திய அதிகாரி தியாகி பதிலடி கொடுத்தார். அவர் கூறும் போது, பாகிஸ்தானின் ஆதாரமற்ற, போலியான இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சார்பு தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், அந்த நாட்டின் இரா ணுவ பயங்கரவாதத்தினர் எழுதி கொடுக்கும் பொய்களை பரப்புவதைப்பார்க்கும்போது வேதனையளிக்கிறது.பாகிஸ்தானில் தான் மனித உரிமை மீறல்கள் அதிகம் நடக்கிறது. எங்களுக்குப் பாடம் எடுக்க வேண்டிய இடத்தில் அவர்கள் இல்லை"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணி அபார வெற்றி

பெங்களூரு, மார்ச்.01

ஆர். சி. பி. அணிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி அபார வெற்றி பெற்றது.

5 அணிகள் பங்கேற்றுள்ள 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பெங்களூருவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற 12 ஆவது லீக் ஆட்டத்தில் பெங்களூரு றோயல் சலஞ் சர்ஸ் - குஜராத் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர். சி. பி. அணியினர்,

குஜராத் அணியின் அபார பந்து வீச்சால் ஓட்டங்கள் குவிக்கத் திணறினர். அத்துடன், அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து தடுமாறினர். இறுதியில் பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்தது. பெங்களூரு தரப்பில் கனிகா அதிகபட்சமாக 33 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து 126 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி துடுப்பெடுத்தாடியது.

தொடக்கத்தில் பெத் மூனி 17 ஓட்டங்களிலும் , தயாளன் ஹேமலதா 11 ஓட்டங்களிலும், ஹர்லீன் தியோல் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஆஷ்லே கார்ட்னர், போப் லிட்ச்பீல்ட் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் .



அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவித்த ஆஷ்லே கார்ட்னர் அரைச்சதம் அடித்தார். இறுதியில் 16. 3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு குஜராத் அணி 126 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது. ஆஷ்லே கார்ட்னர் 58 ஓட்டங்களும், போப் லிட்ச்பீல்ட் 30 ஓட்டங்களும் எடுத்தனர். (எ)

## புள்ளிப் பட்டியலில் கடைசி வெளியேறியது பாகிஸ்தான்

ராவல்பிண்டி, மார்ச்.01

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஒரு வெற்றியைக் கூடப் பெறாமல், நடப்பு சம்பியனான பாகிஸ்தான் வெளியேறியது.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில், பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு மோதி வருகின்றன. லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும்.

இந்த நிலையில், ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த 9ஆவது லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான், பங்களாதேஷ் அணியை எதிர்த்து மோதுவதாக இருந்தது. இரு அணிகளும் தங்களது முதல் 2 ஆட்டங்களில் தோல்வியடைந்து விட்டதால் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்து விட்டன. எனவே, இந்தப் போட்டி நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இவ்விரு அணிகளுக்கும் கடைசி ஆட்டமாகும். இதனை வெற்றியுடன் நிறைவு செய்ய இரு அணிகளும் முனைப்பில் இருந்தன.

இந்த நிலையில், மழை காரணமாக ஆட்டம் இரத்துச் செய்யப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால், இந்தத் தொடரில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளின் பயணம் முடிவுக்கு வந்தது.

இதன்படி, 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஒரு வெற்றியைக் கூடப் பெறாமல், தொடரிலிருந்து நடப்பு சம்பியனான பாகிஸ்தான் வெளியேறியுள்ளது. இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான போட்டியில் தோல்வியும், பங்களாதேஷுக்கு எதிரான போட்டி இரத்தானதால் புள்ளிப்பட்டியலில் பாகிஸ்தான் கடைசி இடம்பிடித்துள்ளது. (எ)

## இந்தியா - நியூசிலாந்து டுபாயில் நாளை மோதல்

டுபாய், மார்ச்.01

இந்திய அணி தனது கடைசி லீக் போட்டியில் நாளை 2 ஆம் திகதி நியூசிலாந்து அணியை எதிர்கொள்கிறது.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் டுபாயில் நடைபெறுகின்றன. மற்ற ஆட்டங்கள் பாகிஸ்தானில் உள்ள லாகூர், கராச்சி, ராவல்பிண்டி ஆகிய நகரங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், இந்திய அணி தனது கடைசி லீக் போட்டியில் நாளை 2 ஆம் திகதி நியூசிலாந்து அணியை டுபாயில் எதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. சக வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், ரோஹித் சர்மா பயிற்சியை தவிர்த்துள்ளார். அவருக்கு காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே, நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அவருக்கு ஓய்வு வழங்கப்பட வாய்ப்புள்ளது. (எ)

## குனேமேன் பந்து வீச தடையில்லை-ஐ.சி.சி.



மெல்பேர்ன், மார்ச்.01

அவுஸ்திரேலிய வீரர் குனேமேன் தொடர்ந்து பந்து வீச ஐ. சி. சி. அனுமதி வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் மேத்யூ குனேமேன் கடந்த மாதம் இலங்கையில் நடந்த டெஸ்ட் தொடரில் மொத்தம் 16 விக்கெட்கள் வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார். ஆனால், அவரது பந்து வீச்சு சர்ச்சைக்குள்ளானது. அதாவது ஐ. சி. சி. விதிப்படி, பந்து வீசும் போது, முழங்கை 15 டிகிரி கோணத்துக்கு மேல் வளையக்கூடாது.

இதைத் தாண்டினால் விதிமுறைக்குப் புறம்பானது என்று அறிவிக்கப்படும். இதே பிரச்னையில் சிக்கிய குனேமேன், பிரிஸ்பேனில் உ[illegible]ள பரிசோதனை மையத்தில் தனது பந்து வீச்சில் சில மாற்றங்களை செய்து சோதனைக்குட்படுத்தினார். இதன் முடிவை ஐ. சி. சி. வெளியிட்டது. இதில் அவரது பந்து வீச்சு தற்போது சரியாக இருப்பதாகவும், அவர் தொடர்ந்து பந்து வீசலாம் என்றும் ஐ. சி. சி. அறிவித்துள்ளது. (எ)

## டில்லி ஆலோசகராக பீற்றர்சன் நியமனம்



புதுடில்லி, மார்ச்.01

டில்லி அணியின் ஆலோசகராக இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கெவின் பீற்றர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்

இந்தியாவில் நடைபெறும் ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டித் தொடரின் 18ஆவது சீசன் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

இந்த நிலையில், டில்லி அணியின் ஆலோசகராக இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஹேமங் பதானி, பந்து வீச்சுப் பயிற்சியாளர் முனாப் பட்டேல், ஆகியோருடன் இணைந்து பணியாற்றவுள்ளார்.டில்லி அணி தனது முதல் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸை எதிர்வரும் 24 ஆம் திகதி எதிர்கொள்கிறது.(எ)

## காலிறுதி சுற்றில் மெத்வதேவ் தோல்வி



டுபாய், மார்ச்.01

டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரரான மெத்வதேவ் காலிறுதியில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள இந்த ரென்னிஸ் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ், நெதர்லாந்தின் டாலன் கிரீக்ஸ்பூருடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய டாலன் கிரீக்ஸ்பூர் 2-6, 7(9)-6(7), 7-5 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)

## டக்கெட் சாதனையை தகர்த்தார் ஸத்ரான்

லாகூர், மார்ச்.01

இங்கிலாந்து வீரர் பென் டக்கெட் சாதனையை ஆப்கானிஸ்தான் வீரர் இப்ராஹிம் ஸத்ரான் தகர்த்துள்ளார்.

நடப்பு ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் கடந்த 26 ஆம் திகதி இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. லாகூரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 325 ஓட்டங்கள் குவித்தது. தனது 6ஆவது சதத்தை விளாசிய இப்ராஹிம் ஸத்ரான் 146 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 12 பௌண்ட்ரிகளுடன் 177 ஓட்டங்கள் குவித்தார்.

இதன் மூலம் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் வரலாற்றில் ஓர் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்த துடுப்பாட்ட வீரர் என்ற சாதனையை ஸத்ரான் படைத்தார்.

இதற்கு முன்னர் நடப்பு தொட ரில் இதே மைதானத்



தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் பென் டக் கெட் 165 ஓட்டங்கள் குவித்ததே சாதனையாக இருந் தது. இதை முறியடித்து புதிய சாதனையை நிகழ்த்தியுள் ளார் இப்ராஹிம் ஸத்ரான். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு வைப்பு...

சபைக்கு இலங்கை மத்திய வங்கி செலுத்தும் 11.67 சதவீத வட்டியை அனைத்து மின்சார பாவனையாளர்களுக்கும் வழங்க வேண்டும்", என்று நீதியரசர்கள் எஸ். துரைராஜா, சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய மூவர் அமர்வு தீர்ப்பளித்தது.

இந்த மனுவில், மின்சக்தி - எரிசக்தி அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர், பொது பயன்பாடுகள் ஆணைக் குழு, சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரியாலையில்...

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பான வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை நீதிவான் ஏ. ஏ. ஆனந்த ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தனது அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பித்தார். அதில், அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் 40இற்கும் மேற்பட்ட எலும்பு மாதிரிகள் பெறப்பட்டன. அவற்றில் இரண்டு தவிர ஏனைய அனைத்தும் மனித எலும்புகளின் எச்சங்களாகவே உள்ளன என்பதை விஞ்ஞானபூர்வமாக உறுதி செய்திருந்தார்.

அத்துடன், 2 அடி ஆழத்துக்கு கீழேயே இந்த மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்ச்சியாக மனித எலும்பு எச்சங்கள் நிறைந்த பகுதியாக உள்ளதா அல்லது தனிப்பட்ட மனித புதைகுழியா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், தொல்லியல்துறையின் மூத்த ஆய்வாளர் ராஜ் சோமதேவா இந்த ஆய்வை செய்வதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ளார் என்றும் சட்ட மருத்துவ அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்ட நீதிவான் ஆனந்தராஜா, முதல் கட்டமாக அந்தப் பகுதியை ஸ்கான் மூலம் ஆய்வு செய்வது என்றும் இது தொடர்பில் எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீதிமன்றத்தில் கலந்துரையாடப்படும் எனவும் கூறினார். அத்துடன், கால நிலையை கருத்தில் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதேசமயம், அரியாலை மனித புதைகுழி தொடர்பில் ஆய்வை செய்ய விருப்பம் தெரிவித்துள்ள ராஜ் சோமதேவா மன்னார், கொக்குத்தொடுவாய் புதைகுழிகளையும் ஆய்வு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் மின் தகன மேடை அமைப்பதற்காக அண்மையில் குழி தோண்டிய போது இந்த மனித எலும்பு எச்சங்கள் வெளிப்பட்டன. இது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, கடந்த 20ஆம் திகதி நீதிவான் ஆனந்தராஜா • அந்தப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

முன்னதாக 1998ஆம் ஆண்டில் செம்மணியில் மனித புதைகுழி இருப்பது வெளிவந்தது. யாழ்ப்பாணத்தை புலிகளிடமிருந்து கைப்பற்றிய இராணுவத்தினர் பிடித்துச் சென்ற பல நூற்றுக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டு அங்கு புதைக்கப்பட்டனர் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. 1999இல் அந்த இடம் ஆய்வு செய்யப்பட்டு 15 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அந்த ஆய்வு நிறுத்தப்பட்டது.

தற்போது அரியாலையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி செம்மணியில் மனித புதைகுழி கண்டறியப்பட்ட இடத்தின் தொடர்நிலமாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காணாமல்...

14 கோடியே 40 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால், அறிக்கை கிடைக்கவில்லை. அதுவும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், 2016ஆம் ஆண்டு தொடக்கம் 14 ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்காக 53 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (ஐ)

## ரமழான்...

ஹிஜ்ரி 1446 புனித ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக் குழு மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்கள பிரதிநிதி மற்றும் உலமாக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதன்போது நாட்டின் எந்த பிரதேசத்திலும் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதாரபூர்வமான தகவல் கிடைக்கவில்லை.

எனவே, ஷஹ்பான் மாதத்தை 30ஆக பூரணப்படுத்தி நாளை ஞாயிற்றுக் கிழமை புனித நோன்பை ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

## பாதுகாப்பு...

வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள்மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

விவாதத்தின் முடிவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் எம் .பி. ஆகியோர் வாக்கெடுப்பை கோரினர். இதனையடுத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் அரச தரப்பினர் நிதி ஒதுக்கீடுகளுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தமிழ் அரசுக் கட்சிகளுடன் இணைந்து சுயேச்சை எம். பியான அர்ச்சுனா எதிராக வாக்களித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம் ஆகிய கட்சிகளை சேர்ந்த 126 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. (ஐ)

## படையினரின்...

அத்துடன், படையினரின் வசமுள்ள காணிகள் முறையான மீளாய்வுகளுடன் கட்டம்கட்டமாக விடுவிக்கப்படும் என்றும் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாண மக்களும் பெருந்தோட்ட மக்களும் அரசாங்கத்துக்கு விசேட ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே, அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்தே செயல்படுகிறோம்.

தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்தவும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறோம். இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலும் இராணுவத்தையே அழைக்கிறோம். ஆகவே, முப்படையின் சேவையை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது", என்றார். (ஐ)

# பாதாள குழுவினரை முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்தினர்!

### பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கொழும்பு, மார்ச் 01

முன்னாள் ஜனாதிபதிகள் பாதாள உலகக் குழுக்களை பயன்படுத்தி பல குற்றச்செயல்களில் ஈடுபட்டார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றிய சமயமே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கோனவல சுனிலை பயன்படுத்தி உயர்நீதிமன்ற நீதியரசரின் வீட்டின்மீது கல்வீச்சு நடத்தினார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பாதாள உலகக் குழுக்களை பயன்படுத்தி பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சாவை கடத்தி கொலை செய்தார்.

தற்போது திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ள ராணி திரைப்படம் ரிச்சர்ட் டிசொய்சா தொடர்பானது எனக் குறிப்பிட்ட அவர், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தத் திரைப் படத்தை பார்த்து ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தனது தந்தை என்ன செய்தார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு யுலம்பிட்டிய அமரே, வம்பொட்டா போன்றவர்களுடன் தொடர்பிருந்தது. யுலம்பிட்டிய நாமல் ராஜபக்ஷவின் மெய்ப் பாது காவலராக இருந்தார் என்றும் கூறினார். (ஐ)

## தென்னக்கோனை...

பொறுப்பதிகாரி அன்ஸ்லம் டி சில்வா உட்பட 5 சந்தேகநபர்களை கைது செய்யவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சந்தேநபர்கள் மீது கொலை சதி குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஐ)

## எரிபொருள்....

தற்போது வழங்கப்படும் 3 வீத தள்ளுபடியை இரத்து செய்து - இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய விலை சூத்திரத்தை அமுல்படுத்த பெற்றோலிய கூட்டுத்தாபனம் எடுத்த நடவடிக்கையை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தினர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்தனர். (ஐ)

## குழுவாக...

தனித்தனியாக அனுப்பியுள்ள கடிதத்தில்,

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குழுவாக ஒன்றுபட்டு - ஒன்றிணைந்து செயல்படுவது சிறந்தது. இந்த குழுவை நம் மத்தியில் உருவாக்கி செயல்பட தங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

இது தமது இனத்தின் பிரச்னைகளை சீர்தூக்கிப் பார்த்து கலந்துரையாடி முடிவுகளை எடுக்க உதவும் என்று நம்புகின்றேன். இவ்வாறான ஒரு குழுவாக பாரளுமன்றத்தில் செயல்பட உங்களின் மேலான ஒத்துழைப்பை தருமாறு வேண்டிநிற்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## நாட்டில்...

வீடுகளில் (50 சதவீதம்) நவீன முறைக்கேற்ப மின்சார தேவைகள் பூரணப் படுத்தப்படவில்லை.

அஸ்வெசும நன்மையை பெறும் 2 ஆயிரத்து 600 குடும்பங்களை மையமாக கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது

இதில், 4 குடும்பங்கள் மாத்திரமே சலுகைத் தொகையை பயன்படுத்தி பணம் ஈட்டும் வழிமுறையை அமைத்துக் கொண்டுள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது. இதனால், பணம் ஈட்டுவதற்கு அஸ்வெசும திட்டத்துக்கு மேலதிகமாக ஏதேனும் ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும்.

மேலும், அஸ்வெசும நன்மை பெறுவோர் குறித்த தொகையை மின்சார கட்டணத்துக்கு 25 வீதமும் உணவுக்காக 16 வீதமும் ஒதுக்குகின்றனர். இதனால், வறுமை தொடர்பில் உரிய அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு 4 சதவீத வீழ்ச்சியை சந்தித்த நாட்டின் வறுமை நிலை 2021ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் பின்னர் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆட்சியை...

நிதியத்தின் நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் நல்லதொரு பலன் கிடைக்கும் என தான் நம்புவதாகவும், பொருளாதாரம் மிகவும் வலுவான நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது - என்றும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத் துக்கு வருகை தந்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீங்கள் கற்பனை செய்கிறீர்கள் என்றால், பொருளாதார நெருக்கடி மூலம் ஆட்சியை கைப்பற்றலாம் என்று. அது தற்போது முடிந்துவிட்டது. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களால் ஆட்சிகள் கவிழ்ந்துள்ளன. பொருளாதார நெருக்கடியால் ஆட்சியை வீழ்த்துவோம் என்பது ஒரு கனவு மட்டுமே. அது நடக்காது. அதற்காக வார்த்தைகளையோ, நேரத்தையோ வீணாக்க வேண்டாம். அவை நடக்கப்போவதில்லை.

எங்கள் நாட்டில் ஆட்சிகள் வீழ்ந்த வரலாறு உள்ளது. கட்சிகளுக்குள் நெருக்கடிகளை உருவாக்கி 2001இல் சந்திரிகா அம்மையாரின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது. முக்கிய காரணம், ஆட்சியில் இருந்த சிலர் எதிர்த்தரப்புக்கு சென்று அமர்ந்ததால் ஆட்சிக்கு உள்ளே ஏற்பட்ட பிரச்னைகள் காரணமாக ஆட்சிகள் வீழ்ந்த சந்தர்ப்பங்கள் உள்ளன.

ஆனால், நீங்கள் நினைக்கும் இந்த ஆட்சி, எந்தவித உள் முரண்பாடுகளும் உருவாகாத ஓர் ஆட்சி. சிலர் என்னை உயர்த்தி பாராளுமன்றத்தில் உள்ள மற்றவர்களை தாழ்த்த முயற்சிக்கிறார்கள். நாங்கள் அதற்கு சிக்கப்போவதில்லை. மிகவும் நன்றி. "அவர் நல்லவர், மற்றவர்கள் மோசமானவர்கள்" என்று சொல்வது ஒரு பொறிதான். அதனால், உள் நெருக்கடி மூலம் ஆட்சியை வீழ்த்தலாம் என்று நினைக்கிறீர்கள் என்றால், அதுவும் நடக்காது.

மக்கள் வீதிக்கு இறங்கி, போராட்டங்கள் நடத்தி, ஆள்பவர்களை விரட்டிய வரலாறு உள்ளது. உங்களால் ஊடக சந்திப்புகள் மூலம் ஏதாவது சொல்வதைத் தவிர, சபையில் ஏதாவது சொல்வதைத் தவிர, மக்களை ஒன்று திரட்டி ஏதாவது சொல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை. எனவே, மக்கள் எதிர்ப்பு மூலம் ஆட்சியை விரட்டலாம் என்று கற்பனை செய்கிறீர்கள் என்றால், அவை அனைத்தும் தோல்வியடையும்."

இதேவேளை, பொருளாதாரம் இப்போது நிலையாக உள்ளது. பயங்கரவாதமும் இனவாதமும் மீண்டும் தலைதூக்குவதற்கு அனுமதிக்க மாட்டோம். 2030 ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தின் பணியாளர்கள் ஒரு இலட்சமாகவும், கடற்படை 40 ஆயிரமாகவும் இலங்கை விமானப்படை 18 ஆயிரமாகவும் குறைக்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க காலம் கடத்தமாட்டோம்!

## சபையில் நீதியமைச்சர் உறுதிமொழி



கொழும்பு, மார்ச் 01

**பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காலம் கடத்தவில்லை எனவும், இது விடயம் தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை மீறப்போவதில்லை எனவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

சர்வதேச மனித உரிமைகள் மூலதர்மங்களுக்கு கட்டுப்பட்டதாகவே புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நீதி அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என தேர்தலுக்கு முன்னரே தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. அதேபோல ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும் நாம் எதிர்த்திருந்தோம்.

புதிய குழுவொன்றை நாம் நியமித்துள்ளோம். பழைய பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலும், புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம் தொடர்பிலும் இந்த குழு மீளாய்வு செய்யும். அடுத்த தேர்தல்வரை காலத்தை இழுத்தடிப்பதற்கான மீளாய்வு அல்ல இது - என்றார். (அ)

# வருட இறுதியில் மாகாண தேர்தல்!

கொழும்பு, மார்ச் 01

மாகாணசபைத் தேர்தலும் வெகுவிரைவில் நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருடம் ஆரம்பத்தில் மேற்படி தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அத்துடன், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயார் நிலையிலேயே உள்ளது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பாராளுமன்றத்தில் பொய் கூறும் கலாசாரம் ஒழிக்கப்படவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 01

பாராளுமன்றத்தில் பொய் கூறும் கலாசாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஏற்படும் பிரச்னைகள் அனைத்துக்கும் கடந்த கால அரசாங்கங்களை குறை கூறும் விதமாகவே ஆளும் தரப்பினர் செயற்படுகின்றனர். புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதாகக் கூறினார்கள்.

அதனை செய்யுமாறு நாம் கேட்கிறோம். உங்களது ஆட்சியில் மாற்றத்தை கொண்டு வாருங்கள். அதை விடுத்து பழையவர்களை குறை கூற வேண்டாம். எனது பாதுகாப்பு உத்தியோகத்தராக கட்மையாற்றியவர் பாதாள குழுவைச் சேர்ந்தவர் என பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கூறினார்.

எங்கேயோ கூட்டத்தில் எனக்கு அருகில் இருந்து புகைப்படம் எடுத்தார் என்பதற்காக பாதாள குழுவினருடன் என்னை தொடர்புபடுத்துகின்றனர். அவ்வாறாயின் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு நான் கோருகிறேன்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகையை இல்லாமல் செய்ததைப் போன்று சபையில் பொய்கூறும் கலாசாரத்தையும் இல்லாதொழிக்க வேண்டும் - என்றார். (அ)

# வடக்கு மக்களுக்கு நீதியை நாம் பெற்றுக்கொடுப்போம்

## அநுர அரசு உறுதியளிப்பு

கொழும்பு, மார்ச் 01

வடக்குக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டிய கூடுதல் பொறுப்பு ஏனைய அரசுகளைவிட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணாயக்கார தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் ஒருமைப் பாட்டை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் வருடம் ஒக்டோபர் மாதத்தில் தேசிய விழாவொன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல மொழிப்பிரச்னையை தீர்ப்பதற்கும் உரிய தலையீடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

தேசிய ஒருமைப்பாட்டுக்காக இந்நாட்டுக்கு அமைச்சொன்று தேவையில்லை என்ற நிலை வரும்போதே எமது வேலைத் திட்டங்கள் வெற்றி என்ற முடிவுக்கு வரமுடியும். அப்போதுதான் எனக்கும் மகிழ்ச்சி ஏற்படும்.

கடந்த தேர்தல்களின்போது வடக்கு மக்கள் வலுவானதொரு செய்தியை வழங்கினர். எனவே, ஏனைய அரசுகளைவிடவும் வடக்குக்கு நீதியை வழங்க வேண்டிய கூடுதல் பொறுப்பு எமது அரசுக்கு உள்ளது.

பாதீட்டிலும் நாம் உரிய ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளோம்- என்றார். (அ)

# பொலிஸ் திணைக்களத்துக்குள் அரசியல் தலையீடு நீக்கப்படும்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, மார்ச் 01

பொலிஸ் திணைக்களத்தில் காணப்படும் அரசியல் தலையீடுகளை முற்றாக நீக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பாதாள குழுக்கள் இயங்கி வருகின்றன. அவற்றுக்கு அரசியல் ரீதியான பாதுகாப்பு வழங்கப்பட்டது.

நாம் கடந்த கால அரசாங்கங்களை எடுத்துக்கொண்டால் பாதாளக் குழுவினருக்கு அவர்களே பாதுகாப்பு வழங்கினார்கள். ஆயினும் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் அதில் மாற்றத்தை கொண்டுவந்துள்ளோம். பாதாளக் குழுவினருக்கு நாம் பாதுகாப்பு வழங்கமாட்டோம்.

அதேபோல், பொலிஸ் திணைக்களத்தில் காணப்படும் அரசியல் தலையீடுகளை முற்றாக நீக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மேல் மட்டத்தில் அது செயற்படுத்தப்படுகிறது - என்றார். (அ)

# ரணிலின் அரசியல் நகர்வுகள் அநுர அரசுக்கு பெரும் சவால்!

கொழும்பு, மார்ச் 01

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற் கொண்டுவரும் சில அரசியல் நகர்வுகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்துக்கு பல்வேறு சவால்களை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளையே பின்பற்றி வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தில் ரணில் அரசாங்கம் ஏற் படுத்திக்கொண்ட உடன்பாடுகளையே அரசாங்கம் அமுல்படுத்தி வருவதாகவும் எதிர்க் கட்சிகள் தொடர்ச்சியான குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றன.

அதற்கு ஏற்றால்போல் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகளில் இருந்து விலகிச் செயல்பட முடியாதென அநுர அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், சமகால அரசாங்கத்துக்கும், தமது கொள்கைகளுக்கும் பாரிய வித்தியாசங்கள் எதுவும் இல்லை என்பதை வெளிகாட்டும் முகமாகவும் ஓர் அரசாங்கத்துக்கு உள்ள செல்வாக்கும் சர்வதேச ரீதியில் தமக்கு தனிப்பட்ட ரீதியில் இருப்பதாகவும் வெளிக்காட்டும் வகையிலான நிகழ்ச்சி நிரலொன்றின் கீழ் ரணில் விக்கிரமசிங்க செயல்பட்டு வருவதாக தெரியவருகிறது.

அதன் காரணமாகவே ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் இந்தியப் பயணத்துக்கு முன்பும், பின்பும் இரண்டு முறை ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு பயணங்களை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

அதன் பின்னர் கடந்த 16ஆம் திகதி ஓமானில் நடை பெற்ற இந்தியன் ஓசன் மாநாட்டில் கலந்துகொண்ட ரணில் விக்கிரம சிங்க, இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்திருந்தார். இந்த சந்திப்பு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஜெய்சங்கரை சந்தித் ததற்கு இணையான சந்திப்பு போல் காட்டப்பட்டது.

ஓமானில் விஜித ஹேரத் மற்றும் ரணில் விக்கிரம சிங்க இடையே முக்கிய கலந்துரையாடல்கள் இடம் பெற்றதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்தி வெளி யிட்டிருந்தன.

இந்தப் பின்னணியில் இந்திய தலைநகர் புது டில்லியில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் ரணில் விக்ரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்துகிறார். இந்த மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்துகொள்கிறார்.

புதுடில்லியில் இந்திய பிரதமர் மோடியுடன் ரணில் விக்கிரமசிங்க முக்கிய சந்திப்பொன்றை நடத்த உள்ள தாகவும் அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், அமைச்சர் விஜித ஹேரத்துடனும் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடலில் ஈடுபட உள்ளதாகவும் தெரியவருகிறது.

சமகால அரசாங்கம் தமது கொள்கைகளை பின்பற்று வததாக மக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கிலான அரசி யல் நகர்வுகளில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ள தன் பின்புலத்திலேயே பல்வேறு சந்திப்புகளை நடத்தி வருவதாக அரசியல் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

சமகால அரசாங்கம் தமது கொள்கைகளின் கீழ் செயல்படுவதாக மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை நிறுத்திவிட்டால் எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக மீண்டும் ஸ்திரமான இடத்தை அடைய முடியும் என ரணில் விக்ரமசிங்க கருதுவதாகவும் தெரியவருகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org